*12*

# ஆயத்தமாகுதலின் மதிப்பு

## [யோவான் 16]

*“நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும். அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை. இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்” (வசனங்கள் 1-7).*

அப்போஸ்தலர்களுக்கு முன்பாகக் காத்திருந்த கடுமையான உண்மை நிலைகளுக்கு அவர்களை ஆயத்தம் செய்வித்தல் என்பது, மேல்வீட்டில் அப்போஸ்தலர்களுடன் இயேசுவின் கலந்துரையாடலின் ஒரு நோக்கமாக இருந்தது. அவரது வார்த்தைகள் இன்றைய நாட்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிற பின்வரும் கூற்றிற்கு ஒத்ததாக இருந்தன: “முன்னெச்சரிக்கப்படுதல் என்பது முன்னதாக ஆயுதம் தரித்திருந்தலாக உள்ளது.” அடுத்த நாள் என்பது அப்போஸ்தலர்களின் துணிவைச் சோதிக்கும், ஆனால் அடுத்த சில ஆண்டுகள் அவ்வாறே இருக்கும். அவர்களுக்கு உடனடியான மற்றும் நீண்ட காலத்திற்கான ஊக்குவித்தல் தேவைப்பட்டது. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை உலகத்தை மாற்றிப்போட்டு அப்போஸ்தலர்களை முற்றிலும் மாறுபட்ட பணிப்பொறுப்பில் வைக்கும். இந்த விஷயங்கள் நடைபெறும்போது, மற்றும் பிசாசானவன் கிறிஸ்தவத்தை அழிக்கப் புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது (வெளிப்படுத்தின விசேஷம் 12:17), அப்போஸ்தலர்கள் தங்களால் முற்றிலுமாக கண்டு உணர்ந்திருக்க இயலாத நடத்துவத்துவப் பொறுப்பிற்குள் அடியெடுத்து வைப்பார்கள்.

இயேசு, தமது வார்த்தைகள் தமது அப்போஸ்தலர்களுக்கு மன உலைச்சலையும் குழப்பத்தையும் தந்தன என்பதை அறிந்திருந்தார். இது உண்மையாக இருந்தபோதிலும், விரைவில் அவர்களை எதிர்கொள்ள இருந்த

*இருளான நாட்களுக்கு அவர்களை ஆயத்தம் செய்வது அத்தியாவசியமாக இருந்தது. குறிப்பாக அவர் தமது பிதாவிடம் தாம் திரும்பச் சொல்ல இருந்ததைப் பற்றி அவர்களிடம் பேசுகையில், அவர்களின் இருதயங்களைத் துக்கத்தினால் தாம் நிறைப்பதை அவர் அறிந்திருந்தார், ஆனால் அவர்களுடனான இந்த ஒளிவு மறைவற்ற உரையாடல் அவசியமாக இருந்தது.*

*அவர் இந்த அப்போஸ்தலர்களிடம் கூறியவை, ஆயத்தப்படுத்துதலின் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் அழுத்தமாய்க் கூறுகின்றன. அவர் தமது உதாரணத்தினால், எந்தக் கிறிஸ்தவரும், இருளான நாட்களுக்கான ஆயத்தம் இன்றி எதிர்காலத்திற்குள் செல்ல முயற்சி செய்யக் கூடாது என்று நமக்கு நினைவூட்டுகிறார். அவரது வார்த்தைகளை நமக்குப் பின்பலமாகப் பயன்படுத்தி நாம், ஏற்புடைய ஆயத்தம் என்பது விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதாகவும் விசுவாசத்தைக் காப்பதாகவும் இருப்பது ஏன் என்பதைக் கண்ணோக்குவோமாக.*

## மறுவலிவூட்டுதல்

*முதலாவது நாம், ஆயத்தமாக இருத்தல் என்பது, வரவிருக்கும் கடினமான காலங்களுக்கு நம்மை மறுவலிவூட்டுகிறது என்பதை உற்றுக்கவனிக்கிறோம். அப்போஸ்தலர்களுக்குச் சோதனைகள் வரும்போது அவர்கள் மனம்கசந்து விடக்கூடாது என்பதற்காக இந்த உரையாடலைத் தாம் நிகழ்த்தியதாக இயேசு கூறினார்:*

> *"நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும். அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்" (16:1-3).*

*முன்பாக வைக்கப்பட்டிருந்த நாட்களில், அவர்கள் உபத்திரவத்தின் அக்கினியை எதிர்கொண்டபோது - அது தங்களுக்கு அன்பானவர்களால் புறக்கணிக்கப்படுதலாகவோ அல்லது தவறாக வழிநடத்தப்பட்ட தீவிர வைராக்கியம் கொண்டவர்களின் கைகளில் மரணம் அடைதலாகவோ இருக்கலாம் - அவர்களுக்கு இயேசு கொடுத்திருந்த வார்த்தைகள் அவர்களை இடறல் அடைவதில் இருந்து காத்துக்கொள்ளும். "இடறலடைதல்" என்பதற்கு அவர் பயன்படுத்திய சொற்றொடர் (skandalizo) "ஒருவர், தாம் கூறியவற்றால் அல்லது செய்தவற்றால் மற்றவர் கோபம் மற்றும்/அல்லது அதிர்ச்சி அடையக் காரணமாகுதல்" என்று அர்த்தப்படுகிறது. இதே வார்த்தையை அவர் 6:61ல் பயன்படுத்தினார். யோவான், "சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?" என்று கூறினார். (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)*

*சோதனைகள் வரும்போது அப்போஸ்தலர்கள் திகைப்படையாதபடிக்கும் தங்கள் இருதயத்தை இழந்துபோகாதபடிக்கும், தேவையான தகவல்கள் யாவற்றையும் அவர்களுக்கு இயேசு கொடுத்தார். அவர்கள், தங்களுக்கு ஏற்படும்*

சிரமங்கள், தங்களுக்காக இயேசு வடிவமைத்திருந்த எதிர்காலத்தின் பகுதியாக இருக்கும் என்பதை உணர்ந்து அறிவார்கள்.

இதே விஷயம் நம்மைப் பொறுத்த மட்டிலும்கூட உண்மையாக உள்ளது. 2 தீமோத்தேயு 3:12ன்படி, துன்புறுத்தப்படுதல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஈடுபட வேண்டிய ஒரு போராட்டமாக உள்ளது. நாம் சோதனைகளை எதிர்கொள்ளும்போது, இடறல் அடையக் கூடாது, ஏனெனில் எதிர்காலத்தில் அவை வரும் என்றே வேதவசனங்கள் நம்மை எச்சரிக்கின்றன. தேவனுடைய வசனத்தை நாம் படித்தலானது, இந்த சோதனைகள் நம்மைப் பெலப்படுத்தும்படிக்கும் நாம் இடறிவிழக் காரணமாகாதபடிக்கும் நமக்கு மறுவலிவூட்டுகின்றன.

## நினைவுகூருதல்

*இரண்டாவது நாம், ஆயத்தமாக இருத்தல் என்பது, கடந்த காலத்தின் ஆசீர்வாதங்களை நினைவுகூரக்கூடிய ஒரு தகுதியிடத்தில் நம்மை வைக்கிறது என்பதைக் காண முடிகிறது.* அப்போஸ்தலர்கள், இயேசு இங்கு இருந்தபோது அவர் தங்களை எவ்வாறு பாதுகாத்தார் என்பதை ஒருநாளில் நினைவுகூரும்படிக்கு, வரவிருந்த இந்தத் துன்பங்களைப் பற்றி அவர்களுக்குத் தாம் கூறியதாக இயேசு உரைத்தார். அவர் பின்வருமாறு கூறினார்:

> அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை. இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது (16:4-6).

அப்போஸ்தலர்கள், தங்களுக்கும் இயேசுவுக்கும் காத்திருந்தது என்ன என்பதைப் பற்றித் தங்களிடத்தில் கூறுவதற்கு அவர் தமது மரணவேளைக்குச் சற்று முன்புவரைக்கும் எவ்வாறு காத்திருந்தார் என்பதை நினைவுகூருவார்கள். அப்படிப்பட்ட சிரமங்களில் இருந்து அவர்களை அவர் இந்த வேளை வரைக்கும் பாதுகாக்க முடிந்திருந்தது. அவர்கள் இயேசு விரும்பிய வண்ணமாக அப்போஸ்தலர்கள் ஆவதற்கு அவர்களை அவர் ஆயத்தம் செய்கையில் அவர்கள் எதிர்காலத்தினால் இடறல் அடைய அவர் விரும்பவில்லை. பிற்பாடு, சிரமங்கள் அவர்கள்மீது சுமந்தபோது அவர்கள், அவர் தங்கள் மத்தியில் இருந்த வேளையில் சில சோதனைகளில் இருந்து தங்களை அவர் எவ்வாறு பாதுகாத்திருந்தார் என்பதை நினைவுகூருவார்கள்.

எதிர்காலத்திற்கு, தக்கவகையிலான ஆயத்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கும்போது, என்ன நடைபெற்றது என்பதைக் கண்ணோக்குவதில் நாம் மகிழ்வடைவதற்கான வாய்ப்பைக் கொண்டு இருப்போம். நாளையதினம் வரும்போது இன்னும் மேன்மையான மற்றும் இன்னும் அதிக பிரயோஜனமான பணிப்பொறுப்பை நாம் நிறைவேற்றும்படிக்கு, நாம் எவ்வாறு ஆயத்தப்படுத்தப்பட்டோம் அல்லது நாம் எவ்வாறு திட்டங்கள் தீட்டினோம்

என்பதை நாம் நினைவுகூர முடியும். பின்னோக்கிப் பார்க்கும் இந்தச் செயல் நமது இருதயங்களை ஆசீர்வதிக்கிறது.

கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளின் மீது கட்டியெழுப்பப்படும் நிலையில் நாம், ''கடினமான மற்றும் வற்புறுத்தும் எதிர்காலத்தை எதிர்கொள்ளும்போதெல்லாம், பின்னோக்கிக்காண, பெருந்தன்மையான மற்றும் கிருபையான கடந்த காலத்தைக் கொண்டுள்ள நபர், பாக்கியவானாக இருக்கிறார்'' எனக் கூறமுடியும். எனது தந்தை, தாம் உயிர்பிழைக்கக் கூடாதவராகிவிடுவோம் என்பதை உணர்ந்தறியும் விதத்தில் அவருடைய உடல்நலப் பிரச்சனைகள் மிகவும் கடுமையாக இருந்தன என்பதை உணர்ந்து அறியத் தொடங்கியபோது, என்னிடத்தில் அவர், "நான் ஒரு நல்ல வாழ்வைக் கொண்டிருந்தேன், மற்றும் நான் மகிழ்வுடன் அனுபவிக்க முடிந்தவற்றிற்கு எல்லாம் நான் நன்றி நிறைந்தவனாக இருக்கிறேன்" என்று கூறினார். அவர் பின்னோக்கிப் பார்த்து நினைவுகூருவதில் இருந்து ஆறுதலையும் பலத்தையும் கண்டார். அப்போஸ்தலர்கள் வேறுவிதமாக இருக்கவில்லை. கடுமையான மற்றும் சோர்வுதரும் உபத்திரவத்தின் நாட்களில்கூட, தங்களிடத்தில் இயேசு எவ்வளவு கிருபை நிறைந்தவராக இருந்தார் என்பதை மறுமுறையும் நினைத்துப் பார்த்தல் என்பது அவர்களை ஆறுதல்படுத்தி நிலைநிறுத்தி இருக்கும்.

## தயார்நிலையில் இருத்தல்

மூன்றாவது, ஆயத்தமாகுதல் என்பது, நமக்காகக் காத்திருக்கும் நல்ல விஷயங்களுக்கு, நம்மைத் தயார்ப்படுத்துகிறது என்பது தெளிவு. இயேசு, தமது அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்காகத் தாம் பிரிந்து செல்ல வேண்டும் என்று அவர்களிடத்தில் கூறினார். அவர், "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்று கூறினார் (16:7).

இந்த அப்போஸ்தலர்களுக்குத் தேவனுடைய திட்டத்தை இயேசு வரைந்தளித்துக் கொண்டிருந்தார். அது ஒரு மகிமையுள்ள மற்றும் தொலைவில் சென்று அடையக்கூடிய ஒரு திட்டமாக இருந்தது. ஆம், வேதனையும் உபத்திரவமும் முன்னதாகக் காத்திருந்தன. அவர்களின் எதிர்காலமானது, மாறுபட்ட வகையிலான வாழ்வையும் மாறுபட்ட கடமைகளையும் கொண்டிருந்தது; ஆனால் - பரிசுத்த ஆவியானவர் என்ற - மாபெரும் மற்றும் ஆச்சரியம் நிறைந்த "அனுகூலமும்" அவர்களுடையதாக இருக்கும்.

தேவன் எப்போதுமே நமக்கு முன் செல்லுகிற தேவனாக இருக்கிறார் என்பதை நாம் நினைவுகூருவோமாக. நாம் எங்கு செல்ல வேண்டும் மற்றும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் நமக்குக் கூறுவதோடு, நாம் எங்கிருக்க வேண்டுமோ அங்கு அவர் நம்மை வழிநடத்திச் செல்கிறார் மற்றும் நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்வதற்கு அவர் நம்மைப் பெலப்படுத்துகிறார். நாம் நாளை தினத்தைச் சென்று அடையும்போது, நமது வருகைக்காகத் தேவன் ஏற்கனவே அங்கு இருப்பதையும் நமக்கு அவர் ஆயத்தப்படுத்தியுள்ள பணிப்பொறுப்புகளை நாம் மேற்கொள்ள அவர் நமக்காகக் காத்திருப்பதையும் நாம் கண்டறிவோம். அவர் சூழ்நிலைகளுக்காக நம்மை ஆயத்தப்படுத்துவது

*மாத்திரமின்றி, அவரே சூழ்நிலைகளையும் ஆயத்தப்படுத்துகிறார்.*

*அப்போஸ்தலர்களுக்கு ஏற்பட்டிருந்த இந்த மாபெரும் மன அழுத்தமான கணத்தில் இயேசு, பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருத்தல் பற்றிய மகிழ்வான சிந்தனையை அவர்களின் இருதயங்களில் வைத்தார். ஆவியானவரின் வல்லமை, அவர்கள் போதிக்கப்பட்டு இருந்த ஒவ்வொரு விஷயத்தையும் அவர்களின் நினைவுக்குக் கொண்டுவரும் மற்றும் அவர்கள் அறிய மற்றும் போதிக்க அவசியமான புதிய சத்தியங்களையும் அவர்களின் சிந்தனைகளில் வைக்கும் (14:26). இந்த வாக்குத்தத்தங்கள் அப்போஸ்தலர்களுக்கு எவ்வளவு மறு உறுதிப்படுத்துபவையாக இருந்திருக்கும், மற்றும் இதைப் போன்ற சூழ்நிலைகளில் நமக்கும் இது எவ்வளவு மறு உறுதிப்படுத்துபவையாக இருக்கும்! நாளைய தினத்தைக் குறித்து நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? அதற்குள் தேவன் நம்மோடு நடப்பார் என்று நாம் அறிந்திருக்கிறோம், மற்றும் அவர் நமக்காகப் பணியை அமைக்கும்படிக்கு அவர் ஏற்கனவே அங்கிருக்கிறார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். அவர் தமது ஊழியத்தை நிறைவேற்ற நமக்காகக் காத்திருப்பார்!*

## முடிவுரை

*பூரணத்துவமான தலைவர் என்ற வகையில் இயேசு, கிறிஸ்தவத்தை நிலைநாட்டுதலில் தமது அப்போஸ்தலர்களின் பணிப்பொறுப்புகளுக்காக அவர்களைப் பூரணத்துவமாக ஆயத்தம் செய்தார். இயேசு பரத்துக்கு ஏறியபின்பு வந்த அந்தத் தொடக்க ஆண்டுகளில் இருந்தவற்றைக் காட்டிலும் மாபெரும் அறைகூவல்விடுக்கும் காலங்களைக் காணுதல் என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது. (யூதாஸ் எண்ணப்படாமல் மற்றும் மத்தியா எண்ணப்பட்டு இருந்தால்) பதினோரு அப்போஸ்தலர்களுக்கு வன்முறையாக மரணம் நேர்ந்தது, அது சந்தேகத்திற்கு இடமின்றி பெரும் வேதனையான மரணமாக இருந்தது என்று பாரம்பரியம் நமக்குக் கூறுகிறது. முதிர்வயதில் மரித்தார் என்று நாம் யூகிக்கும் யோவானும்கூட, "உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன்" என்று கூற முடிந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 1:9).*

*அப்போஸ்தலர்கள் விரைவிலேயே அனுபவிக்க இருந்த எல்லாவற்றிற்கும் தயாராக இருக்கும்படி, அவர்களை இயேசு எவ்வாறு ஆயத்தப்படுத்தினார்? இடறுதலுக்கு எதிராக அவர்களின் சிந்தனைகளை அவர் மறுவலியூட்டினார், அவர்களின் இருதயங்களை நினைவுகூரும்படி ஏவினார் மற்றும் ஆவியானவரின் ஊழியத்திற்கென்று அவர்களின் ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தினார். நாளைய தினத்திற்காகத் தேவன் நமக்கு ஆயத்தப்படுத்தி வைத்திருப்பவை எவையாக இருந்தாலும், அவற்றை நாம் எதிர்கொள்வதற்குத் தேவன் நம்மையும் அவ்வாறே பலப்படுத்தும்படிக்கு, நாம் அவரது வசனத்திற்கு இணங்குவோமாக.*

*"ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன், நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோத்தேயு 4:6-8).*